குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திரு.S.சதாம்உசேன், B.A., L.L.B.
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண். 29/2023

ம.சா. 1

2025–ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 12–ம் தேதி செவ்வாய் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அம்பிகா | தொழில் | |
| கணவர் பெயர் | பெருமாள் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.39 மணி,

Complainant Ambika present. Advocate Mr.Vasanthan present for Advocate Mr.N.Murugan for Complainant. Accused Devi present. Advocate Mr.G.Prabhu present for Accused.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1) நான் 7ம் வகுப்பு வரை படித்துள்ளேன். ஆஜர் எதிரி 9 ம் வகுப்பு வரை படித்துள்ளார். ஆஜர் எதிரிக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியுமா என்றால் எனக்கு தெரியவில்லை. எனக்கு ஆங்கிலம் தெரியாது. நான் தற்போது ரோஜா மகளிர் குழுவின் தலைவி என்றால் சரிதான். ரோஜா மகளிர் குழு 2011 ம் ஆண்டு முதல் இருந்து வருகிறது. 2011 ம் ஆண்டு மேற்படி குழுவின் தலைவி குப்பாயி என்பவர் இருந்தார், அவரின் கீழ் நான் இருந்தேன். 2011 ம் ஆண்டு ஆஜர் எதிரி மேற்படி குழுவின் துணை தலைவியாக இருந்தார். 2011 ம் ஆண்டு ஆஜர் எதிரியிடம் இருந்து காசோலைகளை நான் வாங்கி கொண்டேன் என்றால் சரியல்ல, குப்பாயி வாங்கி கொண்டார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

2) கடன் வாங்குவதற்கு முன்பு காசோலைகளை பெற்றுக் கொள்ளும் வழக்கம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதேபோல் 2011 ம் ஆண்டு ஆஜர் எதிரி குப்பாயி என்பவரிடம் காசோலைகளை கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. எனது கணவர் வீட்டில் இருந்து தையல் தொழில் செய்து வருகிறார். நான் கடந்த 2022 ம் ஆண்டு புதியதாக வீடு கட்டினேன் என்றால் சரிதான். மேற்படி வீட்டை கட்டுவதற்கு ஸ்ரீராம் பைனான்ஸில் ரூ.5,00,000/– ம் மற்றும் வாஸ்து பைனான்ஸில் ரூ15,00,000/–ம் கடன் வாங்கினேன்.

3) தற்போது மேற்படி பைனான்ஸ் கடனுக்கான தவணை தொகையை செலுத்தி வருகிறேன். நான் கடந்த 2021 ஆண்டு வீடு கட்ட ஆரம்பித்து 2023 ம் ஆண்டு கட்டி முடித்தேன். ஆஜர் எதிரிக்கு நான் கடன் கொடுத்த தேதி 09.12.2022

ஆகும். ஆஜர் எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் காசோலை எண் எனக்கு தெரியும், காசோலை எண் 544521 ஆகும். மேற்படி காசோலையை பூர்த்தி செய்தது யார் என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிக்கு ஆங்கிலம் எழுத படிக்க தெரியாத நிலையில் யார் காசோலையை பூர்த்தி செய்து கொடுத்தது என்றால் அவர் கொடுத்த காசோலையை பெற்றுக் கொண்டேன்.

4) ஆஜர் எதிரி நான் சொல்கின்ற தேதியில் என்னிடம் எந்த கடனும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. என்னால் சொல்லப்படும் கடனுக்காக மேற்படி காசோலையை ஆஜர் எதிரி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் எனக்கும் எந்த வரவு செலவும் இல்லை என்றால் சரியல்ல. நான் ரோஜா மகளிர் குழுவின் தலைவியாக இருப்பதால் அந்த குழுவில் கொடுக்கப்பட்ட காசோலையை பூர்த்தி செய்த இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. நான் எனது வீட்டை கடன் வாங்கி கட்டி வரும் நிலையில் ஆஜர் எதிரிக்கு கடன் கொடுக்கும் பொருளாதார தகுதி எனக்கு இல்லை என்றால் சரியல்ல.

5) எனது வழக்கில் காசோலை தொகை எனக்கு எவ்வாறு வந்தது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரியின் சகோதரர் சீனிவாசன் என்பவருக்கும் எனக்கும் வரவு செலவு இருந்து வரும் நிலையில் மகளிர் குழுவின் மூலம் எனக்கு கிடைத்த ஆஜர் எதிரியின் காசோலையை வைத்து இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 12.56 மணி.

Sd/S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur.